# பாஷைகளைப் புரிந்து கொள்ளுதல்



டக் பேச்சுலர்

Copyright © 2013, 2020
by Doug Batchelor

All rights reserved.
Printed in India.

Published by:
**Amazing Facts India**
Post Box No 51
Banjara Hills, Hyderabad
Telangana, 500034

www.AmazingFactsIndia.org

# பாஷைகளைப் புரிந்து கொள்ளுதல்

## டக் பேச்சுலர்


ஒரு அற்புதமான உண்மை . . . . . 2

1 விளக்கத்தின் மாறுபாடுகள் . . . . . . . 3

2 பல பாஷைகளின் வரம் பற்றிய நம்பகத்தன்மை . . . . . . . . . . . . . 6

3 கொரிந்தியருக்குச் செய்தி . . . . . . . 15

4 பரலோக ஜெப பாஷை? . . . . . . . . 18

5 சரியான முன்னுரிமைகள் . . . . . . . . 22

6 உருவாக்கப்படும் போலி . . . . . . . . 26

7 ஞானஸ்நானம் கொடுக்கப்பட்ட புறச்சமயம் . . . . . . . . . . . . . . . 28

8 தேவனுடைய ஆவி நம்மை எப்படி ஆட்கொள்ளுகிறது? . . . . . . . . . . . 33

9 பாபிலோனின் தாறுமாறு . . . . . . . . 36

10 கீழ்ப்படிதலுக்கு ஒப்புக்கொடுத்தல் . . 38

## ஒரு அற்புதமான உண்மை:

பத்து வருடங்களாக முற்றுகை போட்டும் கிரேக்கர்கள் ட்ராய் நகரத்தை கைப்பற்ற முடியாத நிலையில் கடைசியில் அதனை பிடிக்க ஒரு தந்திரமான திட்டத்தை வகுத்ததாக ஒரு புராண கதை ஒன்று உண்டு. அதன்படி முற்றுகையிட்டிருந்த கிரேக்க படை வீரர்கள் தாங்கள் திரும்பிப் போவதாக பாவித்து ஆற்றங்கரையில் வெற்றியின் பரிசாக மரத்தால் செய்யப்பட்ட ஒரு பெரிய குதிரை பொம்மையை விட்டுவிட்டுச் சென்றனர். ஆனால் அந்த குதிரை பொம்மையின் உள்ளே நிறைய ஆயுதம் தாங்கிய படைவீரர்கள் வைக்கப்பட்டிருந்தனர்! சைனன் என்கிற ஒற்றன் ட்ராய் நகரத்தில் இருந்து கொண்டு, அந்த குதிரையை நகரத்தின் சுற்றுப்புறச்சுவர் பக்கம் கொண்டு வந்து வைத்தால் ட்ராய் நகரத்தை யாராலும் வெல்ல முடியாது என ட்ரோஜான் மக்களை நம்ம வைத்தான். அந்த இரவே சைனன் பெரிய குதிரைக்குள் மறைந்திருந்த படைகளை வெளியேற்றினான். ட்ரோஜானின் காவலாளிகளைக் கொன்ற பிறகு காத்திருந்த கிரேக்க வீரர்கள் மதில் வாசல்களை திறந்து ட்ராய் நகரத்தை கைப்பற்றி அதனை சுட்டெரித்தனர்.

## அதிகாரம் 1
# விளக்கத்தின் மாறுபாடுகள்

எதிரியிடம் இருந்து கிடைக்கும் வெகுமதி பெரும் ஆபத்தை விளைவிக்கலாம், பார்ப்பதற்கு பரிசுப்பொருள் போல அலங்காரமான மேலுறையால் சுற்றப்பட்ட ஒரு வெடிகுண்டு அதை திறந்தவுடன் வெடிக்கலாம். இன்றையக் காலக்கட்டத்தில் தேவ சபைக்குள் நுழைந்து சபையை அழிப்பதற்கு பிசாசானவன் புறச்சமயச் சார்புடையதிலிருந்து வந்த போலியான பாஷை வரங்களை உபயோகப்படுத்துகிறான்.

கிறுஸ்தவனாக மாறிய கொஞ்சக்காலத்தில், என் தாயாரை பார்ப்பதற்கு பாம் ஸ்பிரிங் நகரத்திலிருந்து லாஸ் ஏஞ்சல்ஸ் நகரத்துக்குப் பயணப்பட்டுக் கொண்டிருந்தேன். பாதி வழியில் பெந்தெகொஸ்தே சபையைச் சேர்ந்த நடுத்தர வயதான ஒரு பெண்மணி என்னோடு பயணித்தார்கள்; அப்பொழுது நான் சமீபத்தில் மனம் மாறியதைக் கேட்டு மிகவும் சந்தோஷப்பட்டார்கள். நாங்கள் பயணப்பட்டு சென்று கொண்டிருந்தபோது அந்தப் பெண்மணி ஒரு கேள்வியைக் கேட்டார், “நீங்கள் பரிசுத்த ஆவியை பெற்றிருக்கிறீர்களா?”

அந்தப் பெண்மணி கேட்ட கேள்வி எனக்கு ஆச்சரியத்தை கொடுத்தது,

ஏனென்றால் இப்படிப்பட்ட கேள்வியை ஒருவரும் என்னிடம் கேட்டதில்லை. ‘‘நல்லது பெற்றிருக்கிறேன் என நினைக்கிறேன’’ என்றுரைத்தேன். ‘‘நிச்சயமாகவே தேவனுடைய ஆவி என்னுள் இருப்பதை நான் உணர்ந்திருக்கிறேன். என்னுடைய வாழ்க்கையில் கர்த்தர் அநேக மாற்றங்களை செய்ய உதவிக்கொண்டிருக்கிறார். போதை பழக்கத்தை விட்டுவிடுவது மற்றும் திருட்டு, பொய்பேசுவது சாபமிடுவது போன்ற தவறான பழக்கங்களிலிருந்து விடுபடுவது போன்ற நன்மையான காரியங்களை செய்திருக்கிறார்,’’ என்றேன்.

‘‘இல்லை, நான் அதைக்குறித்து சொல்லவில்லை’’ என்று கொஞ்சம் விரக்தியடைந்து சொன்னார், ‘‘நீங்கள் பரிசுத்த ஆவியின் ஞானஸ்தானத்தைப் பெற்றிருக்கிறீர்களா? பல பாஷைகளை பேசுகிறீர்களா?’’

பாவத்திற்கு அடிமைப்பட்டிருந்த நான் விடுதலையாகி ஜெயம் கொண்டிருக்கிறேன் என்பதைக் காட்டிலும், நான் பரவச நிலையை அடையும் அனுபவத்தைப் பெற்றிருக்கிறேனா என்பதே அப்பெண்மணியின் ஆர்வமாயிருந்தது.

இன்னமும் அந்த அன்பான பெண்மணி நான் ஏதோ முக்கியமான ஒன்றை கிறுஸ்தவ அனுபவத்தில் இழந்திருக்கிறேன் என நினைத்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட

அனுபவத்தை நான் இழந்து விடக்கூடாது என்பதற்காக, மிக ஆழமாக, சர்ச்சைக்குரிய தலைப்பான பாஷைகளைக் குறித்து ஆராய ஆரம்பித்தேன். நான் கலந்துக் கொண்ட முதல் சில சபைகள் எல்லாம் கவர்ந்தீர்க்கும் சபைகளாக இருந்தன; அதாவது அவர்கள் களிப்பூட்டும் பாஷைகளைப் பேசுவதை நம்பினார்கள்; இப்படிப்பட்ட அனுபவத்தைத் தெரியாத பாஷைகளை பேசுதல் எனலாம். என்னோடிருந்த வேதாகம வகுப்பின் பல நண்பர்கள் பல பாஷைகளில் பேசினார்கள், அதனால் நான் பகிர்ந்து கொள்ளும் இந்த செய்தி, என்னுடைய சொந்த அனுபவத்திலிருந்தும் பல வருட ஆராய்ச்சிலிருந்தும் கொடுக்கப்படுகிறது.

இந்த ஆராய்ச்சியில் ஒருசில பிரசித்தமடையாத உண்மைகளை நான் எடுத்துச் சொல்ல வேண்டும். கவர்ந்தீர்க்கும் சபைகளைச் சார்ந்த என்னுடைய சகோதர சகோதரிகளின் ஒருசில போதனைகளை நான் ஏற்றுகொள்ள முடியாவிட்டாலும், ஆயிரக்கணக்கான தேவனுடைய பிள்ளைகள் இந்த சபைகளில் இருக்கின்றார்கள் என விசுவாசித்து இந்த செய்தியை ஆரம்பிக்க விழைகிறேன். பல பாஷைகளை பேசும் மக்களிடமும் நிறைய வித்தியாசமான புரிதல் இருக்கிறது என்பதையும் நான் உணர்கிறேன்; ஆதலால் சில வேளைகளில் பொதுவாக

குறிப்பிடும்போது என்னை பொருத்துக் கொள்ளுங்கள். நான் சொல்லபோகும் வேறுபட்ட கருத்துகள் மக்களுக்கு எதிரானது அல்ல; அவர்களுடைய தவறான அணுகுமுறையினால், சத்தியம் சில நேரங்களில் காயப்படுத்தலாம், ஆனால் விடுவிப்பதாகவும் வாக்களிக்கிறது. (யோவான் 8:32)

## அதிகாரம் 2

## பல பாஷைகளின் வரம் பற்றிய நம்பகத்தன்மை

அதனுடைய வரைமுறையுடன் ஆரம்பிப்போம். வேதாகமத்தில் பாஷை என்பது ஒரு மொழியைக் குறிக்கிறது. அந்தந்த நேரத்தில் பயன்படுவதற்கு தேவன் ஆவியின் வரங்களை அளிக்கிறார். பல பாஷைகளின் தேவை என்ன? இயேசு தம் சீஷர்களுக்கு சொன்னது, "ஆகையால், நீங்கள் புறப்பட்டுப் போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுத்து" (மத்தேயு 28:19). இந்த கட்டளையினாலே ஒரு பிரச்சினை எழும்பியது. அப்போஸ்தலருக்கு ஒன்று அல்லது இரண்டு பாஷை மட்டுமே தெரிந்திருக்கும் போது எப்படி உலகமெங்கும்

போய் பிரசங்கிக்க முடியும்? இயேசுவின் சீஷர்களில் அநேகர் படிப்பறிவில்லாதவர்களாயிருந்தாலும் புத்திசாலிகளாயிருந்தார்கள். அவர்களுக்கு கொடுக்கப்பட்ட இந்த பொறுப்பை செய்து முடிக்க தேவன் அவர்களுக்கு பரிசுத்த ஆவியானவரின் விசேஷத்த வரத்தைக் கொடுக்க வாக்களித்தார். அது ஒரு அற்புதமான, இயற்கைக்கு அப்பாற்பட்ட இதுவரையில் கற்றறியாத சுவிசேஷத்தை பரப்புவதற்கும், அறிந்திராத பாஷைகளை பேசுவதற்கான, பரிசுத்த ஆவியினால் அளிக்கப்பட்ட ஒரு விசேஷித்த ஈவு.

“விசுவாசிக்கிறவர்களாய் நடக்கும் அடையாளங்களாவன...நவமான பாஷைகளை பேசுவார்கள்” (மாற்கு 16:17).

நவமான பாஷைகளைப் பேசுவார்கள் என்று இயேசு சொன்னதின் அர்த்தம்; அவர்கள் பற்பல பாஷைகளை ஆராய்ந்து, படித்திராவிட்டாலும் அவைகளைப் பேசும் திறமை ஒரு ‘அடையாளமாக’ காணப்படும். இதற்கு முன்னால் அறிந்திராத பாஷையை சரளமாக பேசுவது என்பது உடனுக்குடன் கிடைக்கப்பெறும் ஒருவரம்.

வேதாகமத்தில் மூன்று இடங்களில் மட்டும் பல பாஷைகளில் பேசும் சம்பவங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. (அப்போஸ்தலர்

2, 10, 19 அதிகாரங்கள்), இந்த மூன்று சம்பவங்களை படித்துப் பார்த்தால் இந்த வித்தியாசமான வரம் பற்றி புரிந்து கொள்ளலாம்.

“பெந்தெகொஸ்தே என்னும் நாள் வந்த போது, அவர்களெல்லாரும் ஒருமனப்பட்டு ஓரிடத்தில் வந்திருந்தார்கள். அப்பொழுது பலத்த காற்று அடிக்கிற முழக்கம் போல, வானத்திலிருந்து சடிதியாய் ஒரு முழக்கம் உண்டாகி, அவர்கள் உட்காந்திருந்த வீடு முழுவதையும் நிரப்பிற்று. அல்லாமலும் அக்கினிமயமான நாவுகள் அவர்களுக்குக் காணப்பட்டு, அவர்கள் ஒவ்வொருவர் மேலும் வந்து அமர்ந்தது. அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டு, ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளிலே பேசத்தொடங்கினார்கள்.” (அப்போஸ்தலர் 2:1-4).

அக்கினி என்பது அதிகாரத்தின் அடையாளமாயிருக்கிறது. மோசே பார்வோனை சந்திக்கச் செல்லும் முன்பாக தேவன் அவனை பலப்படுத்தியது போல, (யாத்திராகமம் 4:10-12), பரலோக பலிபீடம் செல்லும் முன் ஏசாயாவின் உதடுகளை நெருப்பு தழலால் தொட்டது போல (ஏசாயா 6:6,7) பல பாஷை பேசும் அக்கினி நாவினால் அப்போஸ்தலரின் சத்துவமற்ற நாவுகளை தொட்டு பெரும் ஆற்றலை பெற்றுக்கொள்ளும் வரத்தை ஈந்தருளினார்.

இந்த வரத்தை அளிக்க கர்த்தர் ஏன் பெந்தெகொஸ்தே நாள்வரை காத்திருந்தார்? அப்போஸ்தலர் 2:5-11 இதற்கான பதிலை கொடுக்கிறது. “வானத்தின் கீழிருக்கிற சகல தேசத்தாரிலுமிருந்து வந்த தேவ பக்தியுள்ள யூதர்கள் அப்பொழுது எருசலேமிலே வாசம்பண்ணினார்கள். அந்த சத்தம் உண்டான போது, திரளான ஜனங்கள் கூடி வந்து, தங்கள் தங்கள் பாஷையிலே அவர்கள் பேசுகிறதை அவரவர்கள் கேட்டப்படியினாலே கலக்கமடைந்தார்கள். எல்லாரும் பிரமித்து ஆச்சரியப்பட்டு, ஒருவரையொருவர் பார்த்து; இதோ, பேசுகிற இவர்களெல்லாரும் கலிலேயரல்லவா? அப்படியிருக்க, நம்மில் அவரவர்களுடைய ஜென்ம பாஷைகளிலே இவர்கள் பேசக் கேட்கிறோமே, இதெப்படி?.... நாம் நம்முடைய பாஷைகளிலே இவர்கள் தேவனுடைய மகத்துவங்களை பேசக் கேட்கிறோமே என்றார்கள்.”

பெந்தெகொஸ்தே நாள் என்பது பஸ்கா பண்டிகைக்கு 50 நாட்களுக்கு பிறகு வரும் யூதருடைய பரிசுத்த நாள், ரோம சாம்ராஜ்ஜியத்தின் எல்லா எல்லைகளிலுமிருந்து யூதர்கள் தொழுகைக்காக எருசலேமில் கூடுவார்கள். இந்த நல்ல சந்தர்ப்பத்தை தேவன் பயன்படுத்தி, வந்திருக்கும் யூதர்களுக்கு தேவச்செய்தியை அறிவிக்க அவர்களுடைய தாய் மொழிகளில் பேசும் வரத்தை சீஷர்களுக்கு

கொடுத்தார். அந்த நாளில் குறைந்தது 15 வித வெவ்வேறு மொழிகளை பேசுபவர்கள் அங்கே கூடியிருந்தனர். (அப்போஸ்தலர் 2:9-11). இதன் முடிவாக வந்திருந்த ஆயிரமாயிரம் பேர் மனம் மாறினர். பெந்தெகொஸ்தே நாளுக்குப் பிறகு தங்கள் நாடுகளுக்கு திரும்பிச்சென்று இந்த புதிய விசுவாசத்தை மற்றவர்களுக்கு பரப்பினர்.

இந்த உதாரணத்திலிருந்து பல பாஷைகளின் வரம் தேவனுடைய சுவிசேஷத்தை பரப்புவதற்காகவே, உலகில் ஏற்கனவே புழக்கத்திலிருந்த மொழி பயன்படுத்தப்பட்டது என்பது மிகத் தெளிவாக தெரிகிறது.

பெந்தெகொஸ்தே நாளில் கொடுக்கப்பட்ட இந்த அற்புத வரம் வெவ்வேறு பாஷைகளை கேட்பதற்கும் புரிந்து கொள்ளவும் கொடுக்கப்பட்டது என ஒரு சிலர் தவறாக எண்ணுகிறார்கள். அது கேட்பவர்களுக்கு கொடுக்கப்பட்ட வரம் அல்ல, மாறாக ஆவியின் வரம் விசுவாசிகள் பேசுவதற்கு கொடுக்கப்பட்டது. (அப்போஸ்தலர் 2:4). அது கவனித்தவர்களுக்கு கிடைத்த கேட்கும் வரம் அல்ல; ஆனால் பேசுகிறவர்களுக்கு கிடைத்த பாஷைகளின் வரம். பேசின அவர்கள் மீது பொழியப்பட்டது. அக்கினிமயமான காதுகள் அல்ல; அக்கினிமயமான நாவுகள்.

சில சமயங்களில் பாஷைகளின் வரம் ஒரு "பரலோக பாஷை" எனவும், அது தேவனால்

மட்டுமே அல்லது புரிந்து கொள்ளும் வரம் பெற்றவர்கள் மட்டுமே புரிந்து கொள்ள முடியும் என பரிந்துரைக்கப்படுகிறது. வேதாகமமும் அப்போஸ்தலர் இரண்டாம் அதிகாரத்தில் பேசின சீஷர்களும், அவர்களை கேட்ட எல்லாரும் சொல்லப்பட்டவைகளை புரிந்து கொண்டார்கள் என சொல்லுகிறது – " தேவனுடைய மகத்துவங்களைப்" பேச கேட்டார்கள் (வசனம் 11)

இப்பொழுது இரண்டாவது சம்பவத்தில் பேதுரு கொர்நெலியுவுக்கும் அவன் வீட்டாருக்கும் பிரசங்கம் பண்ணினதைப் பார்ப்போம். "இந்த வார்த்தைகளை பேதுரு பேசிக்கொண்டிருக்கையில் வசனத்தைக் கேட்டவர்கள் யாவர் மேலும் பரிசுத்த ஆவியானவர் இறங்கினார். அவர்கள் பல பாஷைகளைப் பேசுகிறதையும், தேவனை புகழுகிறதையும், பேதுருவோடே கூட வந்திருந்த விருத்தசேதனமுள்ள விசுவாசிகள் கேட்கும் போது, பரிசுத்த ஆவியின் வரம் புற ஜாதிகள் மேலும் பொழிந்தருளப்பட்டதைக் குறித்துப் பிரமித்தார்கள். (அப்போஸ்தலர் 10:44-46).

அப்போஸ்தலர் 10:1 – ல் கொர்நேலியு இத்தாலி பட்டணத்தைச் சேர்ந்தவர் என கூறுகிறது; ஆனால் பேதுரு ஒரு யூதனாயிருந்து அராமெய்க் பாஷையை பேசினார். ரோமாபுரியில் வேலை செய்கிறவர்கள் உலகத்தின் எந்த இடத்திலிருந்தும் வரலாம்

என சரித்திரமும் சொல்லுகிறது. இந்த கூட்டத்தில் எதிர்பார்த்த மொழி வேறுபாடுகள் இருந்ததால் பேதுரு ஒருவேளை ஒரு மொழி பெயர்ப்பாளரை வைத்து பேசியிருக்கலாம். ஆனால், பரிசுத்த ஆவியானவர் கொர்நேலியு மீதும் அவன் வீட்டார் மீதும் பொழியப்பட்ட போது பேதுருவோடு இருந்த யூதர்களும், மறு ஜாதியாரும் அவர்கள் அறியாத மற்ற பாஷைகளைப் பேசியதைப் புரிந்துக் கொண்டார்கள். "அவர்களும் தேவனை மகிமைப்படுத்தினார்கள்" என்பதை யூதர்கள் அறிந்து கொண்டது குறிப்பிடப்பட்டிருக்கிறது. பிற்பாடு அவருக்கு ஏற்பட்ட அனுபவத்தை பேதுரு சபை தலைவர்களுக்கு சொல்லும் போது இவ்வாறு சொல்லுகிறார், "பரிசுத்த ஆவியானவர் ஆதியிலே நம்மேல் இறங்கினது போலவே, அவர்கள் மேலும் இறங்கினார்" (அப்போஸ்தலர் 11:15).

சீஷர்கள் பெந்தெகொஸ்தே நாளில் பெற்ற அதே பாஷைகளின் வரத்தை கொர்நேலியும் அவன் வீட்டாரும் பெற்றுக்கொண்டார்கள் என பேதுரு சொல்கிறார். வேறு வார்த்தைகளில் சொல்லபோனால், அவர்கள் முன்பு புரிந்துகொள்ள முடியாத பாஷைகளை இப்பொது பேசினார்கள்.

மூன்றாவதாக மற்றும் கடைசியாக இருக்கிற சம்பவம் பவுல் பன்னிரண்டு எபேசிய சீஷர்களுக்கு பேசினது. அப்போஸ்தலர்

19:6 – ல் இவ்வாறு பதிவிடப்பட்டிருக்கிறது. “அல்லாமலும் பவுல் அவர்கள் மேல் கைகளை வைத்தபோது, பரிசுத்த ஆவி அவர்கள் மேல் வந்தார். அப்பொழுது அவர்கள் அந்நிய பாஷைகளைப் பேசி தீர்க்கதரிசனஞ் சொன்னார்கள்”

அப்போஸ்தலர்களில் பவுல் அதிகம் படித்தவர், பல இடங்களுக்கும் பயணம் செய்தவர். அதிகமான மொழிகளை பேசினவர். (1 கொரிந்தியர் 14:18). பன்னிரண்டு எபேசிய மனிதர்கள் மீது பரிசுத்த ஆவியானவர் வந்த போது அவர்கள் அந்நிய பாஷைகளைப் பேசி தீர்க்கதரிசனம் சொன்னதை கவனித்தார். சுவிசேஷத்தை பரப்புவதற்கான சரியான வழிமுறையாயிருந்த காரணத்தினால் அநேகமாக ரோம சாம்ராஜ்ஜியத்தில் பேசப்பட்ட பொதுவான மொழிகளில் அவர்கள் பேசினார்கள். பவுல், முதல் இரண்டு சம்வங்களுக்கு அப்பாற்பட்ட புதிய பாஷைகளைப் பேசினார்கள் என்று சொல்லவில்லை. அவர்கள் பெந்தெகொஸ்தே நாளில் பெற்றுக்கொண்ட வரத்தைப் போலவே இப்பொழுதும் பெற்றுக்கொண்டார்கள் என்றும் நாம் ஏற்றுக்கொள்ளலாம்.

பல பாஷைகளை பேசுவோர் கூடியிருக்கும் சமயத்தில்தான் பரிசுத்த ஆவியானவர் எல்லாரும் புரிந்து கொள்ளும் வகையில் இப்படிபட்ட பல பாஷையின் வரத்தைக் கொடுக்கிறார் என்பதை அறிந்து கொள்ள

வேண்டும்.

அப்போஸ்தலர் 4 – ம் அதிகாரத்தில் கிடைக்கும் அனுபவம் அப்போஸ்தலர் 2 – ம் அதிகாரத்தின் மறுசுழற்சி அனுபவமே என்பதை காணலாம். வேறு பாஷை பேசுவோர் இல்லாத காரணத்தினால் அவர்கள் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டும் பல பாஷையின் வரம் அங்கே இல்லாததைப் பார்க்க முடிகிறது. அப்போஸ்தலர் 4:31 சொல்வதை கவனியுங்கள், “அவர்கள் ஜெபம் பண்ணின போது, அவர்கள் கூடியிருந்த இடம் அசைந்தது. அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு, தேவ வசனத்தைத் தைரியமாய்ச் சொன்னார்கள்.”

பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் என்பது, புரியாத, தேவையற்ற, அலப்புகிற வார்த்தைகளை பேசுவது அல்ல, மாறாக பிரசங்கம் பண்ணும் திறமையைப் பெற்றுக் கொள்வதேயாகும்.

அதனால் தான் இயேசு சொன்னார், “பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும் போது நீங்கள் பெலனடைந்து, எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிப்பரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள், என்றார்” (அப்போஸ்தலர் 1:8)

## அதிகாரம் 3
# கொரிந்தியருக்குச் செய்தி

பவுல் எழுதியிருக்கிற 14 புதிய ஏற்பாட்டு புத்தகங்களில் கொரிந்தியருக்கு எழுதின முதலாம் நிருபத்தில் மட்டுமே பாஷைகளின் தலைப்பை கையாளுகிறார். கொரிந்தியர் சபையில் ஏதோ தற்காலிக, குறிபிட்ட பிரச்சினை இருந்திருக்க கூடும் அதனால் தான் கொரிந்தியருக்கு எழுதின இரண்டாம் நிருபத்தில் பவுல் அந்நிய பாஷையைப் பற்றி பேசவே இல்லை.

பழங்காலத்து கொரிந்து பட்டணம் இரண்டு சர்வதேச துறைமுகங்களுக்கு புகழ் பெற்றவை. பலவித தேசங்களிலிருந்து பலவித மக்கள் கூடும் இடமாக இருந்ததால், கொரிந்து சபையின் ஆராதனைகள் குழப்பம் நிறைந்ததாய் காணப்பட்டது. இதனால்தான் சில விசுவாசிகள் ஜெபம் செய்வதும், சாட்சி சொல்வதும், அல்லது பிரசங்கம் செய்வதும் மற்ற விசுவாசிகளுக்கு புரியாத ஒன்றாக காணப்பட்டது. அதனால் தான் பவுல் அர்த்தஞ்சொல்லுகிறவன் இல்லாவிட்டால், சபையிலே பேசாமல் தனக்கும் தேவனுக்கும் தெரியப்பேசக் கடவன் என்கிறார். (அப்போஸ்தலர் 14:28), வேறு விதமாக சொல்லபோனால், பாஷை புரியாதோர் இருக்கும் கூட்டத்தில் வேறொரு

பாஷையில் பேசுவது அநாகரிகமான செயல். அப்போஸ்தலர் சொன்ன தெளிவான பேச்சைக் கேளுங்கள், “மேலும் சகோதரரே, நான் உங்களிடத்தில் வந்து உங்களுக்கு இரகசியங்களை வெளிப்படுத்துவதற்காவது, அறிவுண்டாக்குவதற்காவது, தீர்க்கதரிசனத்தை அறிவிக்கிறதற்காவது போதகத்தை போதிக்கிறதற்காவது ஏதுவானதைச் சொல்லாமல், அந்நிய பாஷைகளில் பேசினால் என்னாலே உங்களுக்குப் பிரயோஜனம் என்ன?

“அப்படியே புல்லாங்குழல், சுரமண்டலம் முதலாகிய சத்தமிடுகிற உயிரில்லாத வாத்தியங்கள் தொனிகளில் வித்தியாசம் காட்டாவிட்டால், குழலாலே ஊதப்படுகிறதும், சுரமண்டலத்தாலே வாசிக்கப்படுகிறதும் இன்னதென்று எப்படி தெரியும்?

“அந்தப்படி எக்காளமும் விளங்காத சத்தமிட்டால் எவன் யுத்தத்திற்கு ஆயத்தம் பண்ணுவான்?

“அதுபோல, நீங்களும் தெளிவான பேச்சை நாவினால் வசனியாவிட்டால் பேசப்பட்டது இன்னதென்று எப்படி தெரியும்? ஆகாயத்தில் பேசுகிறவர்களாயிருப்பீர்களே,

“அப்படியிருந்தும், நான் சபையிலே அந்நிய பாஷைகளில் பதினாயிரம் வார்த்தைகளைப் பேசுகிறதிலும், மற்றவர்களை உணர்த்தும்படி என் கருத்தோடே ஐந்து வார்த்தைகளைப் பேசுகிறதே எனக்கு அதிக விருப்பமாயிருக்கும்.

"யாராவது அந்நிய பாஷையிலே பேசுகிறதுண்டானால், அது இரண்டு பேர்மட்டில் அல்லது மிஞ்சினால் மூன்று பேர்மட்டில் அடங்கவும், அவர்கள் ஒவ்வொருவராய் பேசவும், ஒருவன் அர்த்தத்தைச் சொல்லவும் வேண்டும்.

"அர்த்தஞ் சொல்லுகிறவனில்லாவிட்டால், சபையிலே பேசாமல் தனக்கும் தேவனுக்கும் தெரியப் பேசக் கடவன்." (அப்போஸ்தலர் 14:6-9,19,27,28)

இந்த வசனங்களை படித்தபிறகும் சிலர் ஆராதனை வேளைகளில் தெளிவில்லாத வார்த்தைகளை பேசுவது உண்மையில் ஆச்சரியமாக இருக்கிறது! வேதாகமம் முழுவதும் பவுல் கொடுக்கும் உறுதியான செய்தி இவர்களுக்கு எதிர்மறையாகவே இருக்கிறது. 1 தீமோத்தேயு 6:20 – ல் அவர் குறிப்பிட்டு சொல்வது, "சீர்கேடான வீண் பேச்சுகளை விட்டுவிலகு," 2 தீமோத்தேயு 2:16 - ல் இதே ஆலோசனையை மறுபடியும் கொடுக்கிறார்," சீர்கேடான வீண்பேச்சுகளுக்கு விலகியிரு; அவைகளால் அவர்கள் அதிக அவபக்தியுள்ளவர்களாவார்கள்," வேறு வார்த்தைகளில் சொல்ல போனால், பாஷைகளின் வரத்தின் நோக்கமே நாம் பேசுவதை மற்றவர்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்பதே, நீங்கள் பேசுவதை வந்திருக்கும் மக்கள் புரிந்து கொள்ள

முடியவில்லையென்றால், பேசாமல் இருக்கவும்.

## அதிகாரம் 4
## பரலோக ஜெப பாஷை?

அப்போஸ்தலர் புத்தகத்தில் பேசப்படுவது உலகத்தார் புரிந்து கொள்ளும் சாதாரண மொழியே என்பதை கவர்ந்தீர்க்கும் சபையைச் சேர்ந்த என்னுடைய நண்பர்கள் அநேகர் அறிவர். ஆனால் அவர்கள் அடுத்த கட்டத்திற்கு சென்று இரண்டாவது வரம் உண்டு அது ஜெப பாஷை என்பார்கள். அவர்கள் சொல்லும் இந்த வரம் பரிசுத்த ஆவியின் "வாக்குக்கடங்காத பெருமூச்சுகளை" பிரதிபலிக்கிறது என்பார்கள். (ரோமர் 8:26). அதற்கு அவர்கள் சொல்லும் காரணம் பிசாசினால் நமது ஜெபத்தை புரிந்து கொள்ள முடியாது. ஆனால் நாம் பண்ணும் ஜெபத்தை பிசாசானவனிடமிருந்து மறைத்து வைக்க வேண்டுமென நாம் கற்றுக்கொடுக்கப்படவில்லை. கிறுஸ்தவர்கள் ஜெபம் பண்ணுவதைக் கேட்கும் போது பிசாசு பயந்து நடுங்குகிறான்!

ஜெப பாஷை எனும் போதனை 1 கொரிந்தியர் 14:14 - ல் பவுல் சொல்லுவதை வைத்து கூறப்படுகிறது, "என்னத்தினாலெனில், நான் அந்நிய

பாஷையிலே விண்ணப்பம் பண்ணினால், என் ஆவி விண்ணப்பம் பண்ணுமேயன்றி, என் கருத்து பயனற்றதாயிருக்கும்.''

பவுல் ஆவியினால் நிரப்பப்பட்ட போது அவன் தான் என்ன ஜெபம் செய்கிறோம் என்று தெரியாமலேயே பண்ணினதால் அவன் ''தேவ பாஷையில்'' பேசினான் என்று அவர்கள் அர்த்தம் கொள்ளுகிறார்கள். இந்த கோட்பாடு ஒரு முக்கியமான கேள்வியை எழுப்புகிறது. ஜெபம் செய்தவர் தன்னுடைய ஜெபம் கேட்கப்பட்டதா என்பதை எப்படி அறிவார்?

அப்படியானால் 1 கொரிந்தியர் 14:14 - ல் பவுல் உண்மையில் என்னதான் சொல்ல வருகிறார்? சிக்கலான மொழி பெயர்ப்பை புரிந்து கொள்வதில்தான் இந்த பிரச்சினை எழும்புகிறது. ஆங்கில புதிய மொழிபெயர்ப்பில் இந்த வசனம் இப்படி சொல்லுகிறது; ''நான் ஜெபம் செய்யும் போது என்னோடு இருப்பவர்கள் என்ன ஜெபிக்கிறேன் என்று புரிந்து கொள்ள முடியாவிட்டால், நான் செய்கிற அந்த ஜெபம் பயனற்றதாய் இருக்கும்,'' பவுல் மிக தெளிவாக நீங்கள் பேசுவதை மற்றவர்கள் புரிந்துக் கொள்ள வேண்டும், அப்படி யாரும் புரிந்து கொள்ள முடியவில்லையென்றால் மௌனமாயிருப்பதே நல்லது, என்கிறார். அடுத்த சில வசனங்களை கவனியுங்கள். ''இப்படியிருக்க, செய்ய வேண்டுவதென்ன? நான் ஆவியோடும் விண்ணப்பம் பண்ணுவேன்,

கருத்தோடும் விண்ணப்பம் பண்ணுவேன்: நான் ஆவியோடும் பாடுவேன், கருத்தோடும் பாடுவேன். இல்லாவிட்டால், நீ ஆவியோடு ஸ்தோத்திரம்பண்ணும் போது, கல்லாதவன் உன் ஸ்தோத்திரத்திற்கு ஆமென் என்று எப்படிச் சொல்லுவான்? நீ பேசுகிறது இன்னதென்று அவன் அறியானே.'' (1 கொரிந்தியர் 14:15,16). இந்த வசனத்தின் பிரகாரம் புரிந்து கொள்ளும் பிரச்சினை யாருக்கு இருக்கிறது? கேட்ப்பவர்களுக்குதான் இந்த பிரச்சினை தவிர பொதுவாக சொல்லப்படுவது போல பேசுபவர்க்கு அல்ல. நீங்கள் கேட்டு புரிந்துகொள்ள முடியாத போது ஜெபத்தின் முடிவில் எப்படி 'ஆமென்' (அப்படியே ஆகட்டும்) என்று சொல்வீர்கள். ஒரு மொழிபெயர்ப்பாளர் இல்லாமல் என்ன பேசப்பட்டது என்பதை தெரிந்து கொள்ள முடியாதே, உங்களைப் பொருத்தவரையில் பிசாசின்மீது ஆசீர்வாதம் கேட்டிருப்பது போலிருக்கும்.

1 கொரிந்தியர் 14 - ம் அதிகாரத்தில் ஒரு காரியம் மிகவும் வெளிப்படையாக தெரிகிறது; மக்களுக்கு சுவிசேஷத்தை அறிவிப்பதும் அதன் மூலமாக சபைக்கு நல்லொழுக்கத்தை போதிப்பதுமே, பல பாஷை அல்லது அந்நிய பாஷைகளின் நோக்கமாயிருக்கிறது. கேட்பவர்கள் பேசப்படும் செய்தியை புரிந்து கொள்ள முடியவில்லையென்றால் சபையார்

நல்லொழுக்கத்தை வளர்த்து கொள்ள முடியாது. அடுத்து மொழி பெயர்ப்பாளர் இல்லையென்றால், பேசுகிறவர் வெறுமனே காற்றில் பேசிக்கொண்டிருப்பார்; அவருக்கும் தேவனுக்குமே அது வெளிச்சம். தவறாக மேற்கோள் காட்டப்படுகிற வசனம் இரண்டின் பொருள் இதுதான், “அந்நிய பாஷையில் பேசுகிறவன் மனிதரிடம் பேசாமல் தேவனிடம் பேசுகிறான், ஆவியினாலே இகசியங்களைப் பேசினாலும் ஒருவரும் அதைப் புரிந்து கொள்வதில்லை.”

பேசுகின்ற வார்த்தைகளை கேட்கிறவர்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்பதை பவுல் வலியுறுத்துகிறார். அப்படியில்லையென்றால் சுவிசேஷ ரகசியங்களைச் சொல்ல விரும்புகிறவன் பேசாமல் அமர்ந்திருந்து தேவனுக்கும் அவனுக்கும் இடையே பக்தி உண்டாக தியானம் செய்யக்கடவன். “அதுபோல, நீங்களும் தெளிவான பேச்சை நாவினால் வசனியாவிட்டால் பேசப்பட்டது இன்னதென்று எப்படி தெரியும்? ஆகாயத்தில் பேசுகிறவர்களாயிருப்பீர்களே,

“அர்த்தஞ் சொல்லுகிறவனில்லாவிட்டால், சபையிலே பேசாமல், தனக்கும் தேவனுக்கும் தெரிய பேசக்கடவன்” (1 கொரிந்தியர் 14:9,28) பல பாஷைகளில் பேசுவதன் நோக்கமே பாஷைகளின் பிரிவுகளை உடைத்தெரிந்து சுவிசேஷத்தை மற்றவர்களுக்கு எடுத்துரைக்க

வேண்டுமென்பதே தெளிவாகிறது!

சிலர் கேட்கிறார்கள், "பவுல் தேவதூதர்களின் பாஷையைப் பேசவில்லையா?"

பவுலின் பதில், இல்லை, "நான் மனுஷர் பாஷைகளையும் தூதர் பாஷைகளையும் பேசினாலும்..." 1 கொரிந்தியர் 13:1. இந்த வசனத்தை அதன் மெய்ப் பொருளில் கூர்ந்து கவனித்தால் 'பேசினாலும்' எனும் சொல் 'அறிந்தாலும்' என்று பொருள்படும். உதாரணத்திற்கு பவுல் 2-ம் வசனத்தில் கூறுவது, "...சகல விசுவாசமுள்ளவனாயிருந்தாலும் .." ஆனால் அவர் சகல விசுவாசத்தையும் கொண்டிருக்கவில்லை. வசனம் 3 - ல் சொல்வது "...என் சரீரத்தைச் சுட்டெரிக்கப்படுவதற்கு கொடுத்தாலும்..." ஆனால் பவுல் சுட்டெரிக்கப்படவில்லை; மாறாக கொலை செய்யப்பட்டார். அதனால் பவுல் "என்றாலும்" எனும் வார்த்தையை "இருந்த போதிலும்" என பொருள்பட பேசுகிறார்.

## அதிகாரம் 5

# சரியான முன்னுரிமைகள்

உண்மையான பாஷைகளின் வரம் உட்பட பரிசுத்த ஆவியின் எல்லா வரங்களும் சபைக்கு தேவை. எல்லாவரங்கள்

கிடைக்கக் கூடியதாயும் இருக்கின்றன என்று நான் விசுவாசிக்கிறேன். ஆனாலும் சில வசனங்கள் முக்கியமானவைகள் மற்றும் சில அதிமுக்கியமானவைகள் என வேதாகமம் போதிக்கிறது. முக்கியமானவைகளுக்கு நாம் அதிக கவனம் செலுத்த வேண்டும், "இப்படியிருக்க முக்கியமான வரங்களை நாடுங்கள்..." (1 கொரிந்தியர் 12:31)

உண்மையில் வேதாகமம் ஆவிக்குரிய வரங்களை வரிசைப்படுத்தும் போது, பாஷைகளின் வரங்கள் கடைசியில் கொடுக்கப்பட்டிருக்கிறது, "தேவனானவர் சபையிலே முதலாவது அப்போஸ்தலரையும், இரண்டாவது தீர்க்க தரிசிகளையும், மூன்றாவது போதகர்களையும், பின்பு அற்புதங்களையும், பின்பு குணமாக்கும் வரங்களையும், ஊழியங்களையும், ஆளுகைகளையும், பலவித பாஷைகளையும் ஏற்படுத்தினார்" (1 கொரிந்தியர் 12:28).

"நீங்களெல்லாரும் அந்நிய பாஷைகளைப் பேசும்படி விரும்புகிறேன்; ஆகிலும், அந்நிய பாஷைகளில் பேசுகிறவன் சபைக்கு பக்தி விருத்தி உண்டாகும்படிக்கு அர்த்தத்தையும் சொல்லாவிட்டால், தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறவன் அவனிலும் மேன்மையுள்ளவன்; ஆதலால், நீங்கள் தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறவர்களாக வேண்டுமென்று அதிகமாய் விரும்புகிறேன்." (1 கொரிந்தியர் 14:5).

ஆனாலும் சில கவர்ந்தீர்க்கும் சபை போதகர்கள் அந்த வரிசையையே தலைகீழாக மாற்றி பாஷைவரங்களுக்கு முதல் இடத்தைக் கொடுத்துப் பேசுகிறார்கள், பாஷைகளை பேசாதவர்கள் இரண்டாம் பட்ச கிறிஸ்தவர்கள் என நம்மை நினைக்க வைக்கிறார்கள். ஆனால் பவுல் வெவ்வேறு வரங்கள் வெவ்வேறு மக்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது; யாருமே எல்லா வரங்களையும் பெற்றுக் கொள்வதில்லை என கூறுகிறார். 1கொரிந்தியர் 12:29,30 - ல் ஒரு கேள்வியை கேட்கிறார், "எல்லாரும் அப்போஸ்தலர்களா? எல்லாரும் தீர்க்கதரிசிகளா? எல்லாரும் போதகர்களா? எல்லாரும் அற்புதங்களை செய்கிறவர்களா? எல்லாரும் குணமாக்கும் வரங்களுடையவர்களா? எல்லாரும் அந்நிய பாஷைகளைப் பேசுகிறார்களா? எல்லாரும் வியாக்கியானம் பண்ணுகிறார்களா?" இதற்கான பதில் இல்லை என்பதுதான்.

வேதாகமம் சொல்வது, "ஆவியின் கனியோ, அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம்;" (கலாத்தியர் 5:22,23). ஆனால் இதே போதகர்கள் ஆவியின் வரம் பாஷைகள் மட்டுமே என்றும், ஒவ்வொரு விசுவாசியும் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு பாஷைகளை பேசுவார்கள் என்றும் எண்ண வைத்திருக்கிறார்கள். ஆனாலும் வேதாகமத்தில்

கொடுக்கப்பட்டிருக்கும் 50 க்கும் அதிகமான சம்பவங்களில் மூன்று முறை மட்டுமே அந்த அனுபவத்தோடு பரிசுத்த ஆவியின் தொடர்பு இருக்கிறதை காணலாம்.

மேலும் இயேசுவே நமது சிறந்த உதாரணம். அவர் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டிருந்தார்; ஆனால் எங்குமே அவர் அந்நிய பாஷையில் பேசவில்லை. யோவான் ஸ்நானகன், "...தன் தாயின் வயிற்றிலிருக்கும் போதே பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டிருந்தார்." (லூக்கா 1:15). ஆனால் அவர் பலபாஷைகளைப் பேசியதாக எங்கும் குறிப்பிடவில்லை.

புதிய ஏற்பாட்டில் இருக்கும் 27 புத்தகங்களில் 3 புத்தகங்களில் மட்டும் தான் பாஷைகளின் வரத்தைப் பற்றிப் பார்க்கிறோம். ஏறக்குறைய 39 பேர் வேதாகமத்தை எழுதியிருக்கிறார்கள்; அவர்களில் மூன்று பேர் மட்டுமே – லூக்கா, பவுல் மற்றும் மாற்கு பாஷைகளை பற்றி கூறியிருக்கிறார்கள். வேறு வார்த்தைகளில் சொன்னால், தேவன் எதை அதிகமாக வலியுறுத்துகிறாரோ அதையே நாம் வலியுறுத்த வேண்டும்.

## அதிகாரம் 6
# உருவாக்கப்படும் போலி

உண்மையான பாஷைகளின் வரம் என்பது சுவிசேஷத்தை வல்லமையாய் பரப்பப்படுவதற்கான ஒரு உபகரணம். ஆனால் ஒன்றை ஞாபகத்தில் கொள்ள வேண்டும் சாத்தான் எல்லா சத்தியத்திற்கும் போலிகளை உருவாக்கி வைத்திருக்கிறான்.

கவர்ந்தீர்க்கும் சபைகளில் பேசப்படும் அந்நிய பாஷையை “தெரியாத மொழி” (Glossolalia) என சொல்லலாம். அமெரிக்க ஹெர்டேஜ் அகராதியில் இவ்வாறு வரையறுக்கப்பட்டிருக்கிறது; “இட்டுக்கட்டப்பட்ட பொருளில்லாத பேச்சு, விசேஷமாக இந்தப் பேச்சு மனச்சிதைவு நோயால் பாதிக்கப்பட்டோர் தன் நினைவை இழந்த நிலையில் பேசும் பேச்சு”

அதே அகராதியில் பாஷை என்பதற்கு சொல்லப்படும் வரையறை; “மனிதனுடைய நினைவுகளையும், உணர்ச்சிகளையும் புரிந்து கொள்ளும் சத்தங்களை எழுப்பி அதற்கு எழுத்து வடிவம் கொடுத்து கேட்போர் புரிந்து கொள்ளப் பேசப்படுவதே பாஷை” எந்த வரையறையாயிருந்தாலும் இணைக்கப்படாத சத்தத்தினாலே பேசப்படும் புரியாத பாஷை ஒரு மொழியாக இருக்க முடியாது.

இந்த பாஷைகளைப் பேசுவதை அநேக வேளைகளில் கேட்டிருக்கிறேன். நான் வழக்கமாக போகும் ஒரு கவர்ந்தீர்க்கும் சபையில் போதகரும் அவர் மனைவியும் இந்த குழுவைச் சேர்ந்தவர்கள். போதகர் பிரசங்கம் செய்யும் போது திடிரென அவர் மனைவி குதித்தெழுந்து கைகளை விரித்து பரவச நிலையில் பேச ஆரம்பிப்பார். ஆனால் அவர் பேசுவதையே திரும்ப திரும்ப பேசுவார்.

“ஹாண்டா காலா ஷாமி, ஹாண்டா காலா ஷாமி, ஹாண்டா காலா ஷாமி...” மறுபடியும் மறுபடியும் அதே வார்த்தைகள். இது எனக்கு அதிகமான சந்தேகத்தை எழுப்பியது. ஏனென்றால் இயேசு சொன்னார், “அன்றியும் நீங்கள் ஜெபம் பண்ணும் போது, அஞ்ஞானிகளை போல வீண் வார்த்தைகளை அலப்பாதேயுங்கள்...” மத்தேயு 6:7.

ஒவ்வொரு முறையும் இப்படி நடக்கும்போது அவர் கணவர் பிரசங்கத்தை நிறுத்திவிட்டு மனைவியின் பேச்சை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து ஏதோ ஒரு செய்தியை கொடுப்பார். சதாரணமாக அவர் கர்த்தர் பேசிச் சொல்வதாவது என ஆரம்பிப்பார். ஒவ்வொரு முறையும் அந்த பெண்மணி ‘ஹண்டா காலா ஷாமி’ என்று சொல்லும் போது அவருடைய வெறுமையான மொழிபெயர்ப்பு வெவ்வேறாக இருக்கும்; சில வேளைகளில் அவர் பேசுவதைவிட மூன்று

பங்கு அதிகமாக இருக்கும், எனக்கொரு ஆச்சரியம், இது தேவனுடைய செய்தியாய் இருந்தால் முதலாவதாக நமக்கு ஆங்கிலத்தில் கொடுத்திருக்க மாட்டாரா.

## அதிகாரம் 7
## ஞானஸ்நானம் கொடுக்கப்பட்ட புறச்சமயம்

நான் சிறு வயதில் சரித்திர புத்தகத்தில் படித்த ஒரு கதையை தான் இந்த பாஷைகளின் குழு ஞாபகப்படுத்தியது. இந்த நவீன கால வெளிப்பாடான பாஷைகள் வேதாகமத்தின் வெளிப்பாடு அலல் மாறாக புராண காலத்து ஆவிகளின் சடங்காச்சார முறைமைகளேயாகும். கி.மு. ஆறாம் நூற்றாண்டில் பார்னசஸ் என்கிற மலை அருகில் ஒரு கோவிலில் ஆரக்கிள் ஆப் டெல்பி குடியிருந்தது. மது, கருவுருதல், சிற்றின்ப நடனம் இவைகளுக்கு கடவுளான டயோனிசஸ், அதோடு இசைகளின் கடவுள்களான ஒன்பது மியூசஸ், ஆகிய இவர்களுக்கு டெல்பி புனிதமானவர்.

களிப்பூட்டும் இசை இசைக்கப்படும் போது, தலைமை பூசாரியான பைத்தியா என்பவள் ஒருவித போதையூட்டும் ஆவியை சுவாசிப்பாள். நிலை தடுமாறி வெறி கொண்டு, உளர

ஆரம்பிப்பாள். பூசாரியால் உச்சரிக்கப்படுகின்ற வித்தியாசமான சப்தங்களை பூசாரி ஒருவர் வியாக்கியானம் செய்வார். வழக்கமாக வசனத்தின் மூலம் பேசுவார். அவளுடைய பேச்சுகள் அப்பொல்லோவின் வார்த்தைகளாக மதிக்கப்பட்டது; ஆனால், இந்த செய்திகள் தெளிவற்ற இரு பொருள்படும் வகையில் இருக்கும். அதனை தவறு என்றும் சொல்லமுடியாதபடி இருக்கும்.[1]

நியூ மெக்சிகோவில் அமெரிக்க சுதேசிகளுடன் வாழ்ந்த காலத்தில், இது போன்ற சடங்குகளை அநேகம் முறை கண்டிருக்கிறேன். இந்தியர்கள் எதையோ மயக்கநிலையில் சாப்பிடுவது போல பாவித்து ஒரு வட்டவடிவில் அமர்ந்த பாடல் பாடி மணிக்கணக்காக மேளம் கொட்டுவார்கள். அதற்கு முன்பதாகவே மேளம் கொட்டப்படும் போது அநேகர் வேதனை நிறைந்த பார்வையுடன் ஏதோ சொல்ல முணுமுணுத்துக் கொண்டிருப்பர். இன்று நிறைய அமெரிக்க சுதேசிகள் மத்தியில், தங்கள் பழைய மதங்களின் நடவடிக்கை ஒத்துபோவதால் அங்கும் கவர்ச்சிகர சபைகள் பிரபலமாயிருக்கின்றன.

தங்களுடைய கடவுள்களின் ஆசீர்வாதத்தையும் பெறுவதற்காக ஆப்பிரிக்க புறஜாதி மலைவாசிகளில் அநேகர் கோழி அல்லது ஆடு போன்றவற்றை பலியிட்டு,

எரிகிற தீயின் முன்பாக வட்டமிட்டு ஒருவித ஊக்குவிக்கும் மேளதாளத்தோடு மணிக்கணக்கில் ஆடிபாடி நடனமிடுவார்கள். இறுதியாக சிலபேர் தங்கள் கடவுள்கள் அவர்கள் மேல் இறங்குவது போல பாவித்து அச்சமூட்டும் ஆவி உலக பாஷைகளைப் பேசுவர். அந்த பாஷையை ஒரு செய்தியாக சூனியக்காரர் அல்லது பூசாரி மொழிபெயர்த்து சொல்வார். வெஸ்ட் இண்டீஸ் நாட்டில் இன்னமும் வூடு கத்தோலிக்கர்கள் இந்த சடங்கைச் செய்கிறார்கள்.

1800 ஆண்டுகளில் வட அமெரிக்க கிறிஸ்தவர்களின் மத்தியில் இந்த புற ஜாதியாரின் சடங்குகள் முதன்முதலாக காணப்பட்டன. அமெரிக்காவுக்கு கொண்டுவரப்பட்ட அநேக அடிமைகள் கிறிஸ்தவர்களாக மாற கட்டாயப்படுத்தப்பட்டபோது அவர்களால் வேதாகமத்தை வாசிக்க முடியவில்லை. ஆப்பிரிக்க தேசத்து மலைவாசிகள் பல இடங்களிலிருந்து வந்திருந்தாலும் அவர்களில் பொதுவாக காணப்பட்டது ஆவி பிடித்தவர் முணுமுணுத்து கொண்டிருக்க ‘ஆவியின் நடனங்கள்’ ஆடுவது.

அடிமைகள் இதனை கிறிஸ்தவர்களின் ‘ஆவியின் வரங்கள்’ என தவறாக தொடர்புபடுத்தி, தங்கள் கூட்டங்களில் மாற்றம் செய்யப்பட்ட வடிவில் உபயோகிக்க

ஆரம்பித்தனர். இந்த வெறி கொள்ளும் ஆராதனைகள் பெரும் ஒலி நயத்தோடு கூடிய இசையுடன் முதலாவதாக தென் அமெரிக்காவில் பரவியது; இதில் பங்கு கொண்டவர்களை கிண்டலடித்து மூல சபை பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் அவர்களை "ஹோலா ரோலர்ஸ்" என அழைத்தனர். தன் நிலை இழந்த நேரத்தில் விஷ பாம்புகளையும் பிடிக்கும் அளவுக்கு சென்று தாங்கள் கொண்டிருப்பது 'ஆவி' தான் என நிரூபிக்க ஆரம்பித்தனர். (இது மாற்கு 16:18 - ல் சொல்லப்படும் "சர்ப்பங்களை எடுப்பார்கள்" என்பதை தவறாக பயன்படுத்தியது ஆகும். பவுலை சர்ப்பம் ஒன்று கடித்து அதின் விஷம் அவனை பாதிக்கவில்லை என்கிற சம்பவத்தைச் சுட்டிக்காட்டுகிறது. அப்போஸ்தலர் 28:3-6 பார்க்கவும்) மக்கள் விஷபாம்புகளை தேடிச்சென்று தாங்கள் கொண்டிருப்பது பரிசுத்த ஆவிதான் என நிருபணம் செய்வதென்பது உண்மையில் தேவனை சோதிப்பதாகும்!

1906 - ம் வருடம் லாஸ் ஏஞ்சல்ஸ், அகுசா தெருவில் நடந்த அனைத்து நாடு அப்போஸ்தலிக் பெயித் காஸ்பல் மிஷன் மூலமாகத்தான் பெந்தெகொஸ்தே இயக்கத்தின் விஸ்தரிப்பு காக்கேசியர்கள் மத்தியில் ஆரம்பித்தது. கருப்பின முன்னாள் புனித போதகர் வில்லியம் சேமூர் என்பவர்தான் தலைவர். அதிலிருந்து தலைவர்கள்

கோட்பாடுகளை வகுத்து மற்ற முதன்மை கிறிஸ்தவர்களை கவர்ந்தீர்த்தனர்.

"அதற்கு பிறகு 1960 களில் கவர்ச்சிகர இயக்கம் பாரம்பரிய கிறிஸ்தவ இயக்கங்களைப் பின்பற்றுகிறவர்களை கவரத்துவங்கியது. அதிலிருந்து அதீத வளர்ச்சியைக் காண ஆரம்பித்து இதுவரையில் லட்சக்கணக்கான கவர்ச்சிக்கர பின்னடியார்களை பெந்தெகொஸ்தே மற்றும் கத்தோலிக்க சபைகள் உலகம் முழுவதும் பெற்றிருக்கின்றன."[2]

தெரியாத மொழியில் பேசும் புற மதங்களில் இசைதான் பெரும்பங்கு வகிக்கிறது என்பதை அறிந்து கொள்வது முக்கியம். இந்த போலியான பாஷைகளின் வரம் முதன்முதலாக 'ஞான முழுக்கு' பெற்ற புறமத இசை மற்றும் ஆராதனை முறைகள் மூலம் இடம் பிடித்தது. மேலாதிக்கம் பெற்ற திரும்ப திரும்ப எழுப்பப்படும் ஒலிநயம் மற்றும் கூட்டிக் குறைத்து எழுப்பப்படும் தாள ஒலி பகுத்தறிகின்ற உணர்வை வெறுமைப்படுத்தி, ஆழ் மனதை ஒரு வசிய நிலைக்கு தள்ளுகிறது. இப்படிப்பட்ட பாதிக்கப்பட்ட நிலையில் கிளர்ச்சியூட்டும் வார்த்தைகளை பேசும் ஆவியானது நுழைகிறது.

இப்பொழுது சாத்தான், ட்ரோஜான் குதிரை போல, போலியான பாஷைகளை உபயோகப்படுத்தி கிறிஸ்தவ

சபைகளிலும் அஞ்ஞான ஆராதனை பாணிகளை அறிமுகப்படுத்தி, பயப்படும் அளவுக்கு வெற்றியும் காண்கிறான். சாத்தான் கிறிஸ்தவர்களின் கவனத்தை விசுவாசத்திலிருந்து உணர்ச்சி பூர்வமானதுக்கு திசைத்திருப்புகிறான். ஒருசில இந்த கவர்ந்தீர்க்கும் சபைகள் வேதாகமே பழைய கடிதம் தான் என்றும் பல பாஷைகள் மூலம் கிடைக்கும் செய்திகளே புதிய வெளிப்படுத்துதலாகும் மற்றும் அதிக நம்பகத்தன்மை உள்ளது என்றும் சொல்லுமளவுக்கு செல்கிறார்கள்.

இப்பொழுது சாத்தானுடைய கடைசி செயலாக்கத்திற்கு மேடை அமைக்கப்பட்டிருக்கிறது!

## அதிகாரம் 8

# தேவனுடைய ஆவி நம்மை எப்படி ஆட்கொள்ளுகிறது?

"ஆவியால் ஆட்கொள்ளப்பட்டவர்" கீழே விழுந்து புரள வேண்டும், எதையோ பேசி முணுக வேண்டும் என்ற கருத்தே பரிசுத்த ஆவிக்கு ஒரு அவமானம் ஆகும். தேவன் நமக்கு பரிசுத்த ஆவியை அருள்வதே நாம் அவருடைய சாயலைப் பெறவேண்டும்

என்பதற்காகவே, நமது கண்ணியத்தையோ, சுயக்கட்டுப்பாட்டையோ இழப்பதற்கு அல்ல.

கர்மேல் மலையின்மேல் பாகால் தீர்க்கதரிசிகள் பலிபீடத்திற்கு எதிரே குதித்து ஆடினார்கள், உரத்த சத்தமாய் கூப்பிட்டார்கள். தீர்க்கதரிசனம் சொல்லி தங்களைக் கீறிக் கொண்டார்கள். அதற்கு மாறாக எலியா மண்டியிட்டு ஒரு எளிமையான ஜெபத்தை ஏறெடுத்தார். (1 இராஜாக்கள் 18:17-46).

"தேவன் கலகத்திற்குத் தேவனாயிராமல்..." (1 கொரிந்தியர் 14:33). தேவன் இதற்கு பொறுப்பில்லை என்றால் வேறு யார் பொறுப்பாக முடியும்?

நாம் ஆவியைப் பெறும்போது நம் நிதானத்தை இழக்கிறோம் என்கிற கருத்து வேதாகமத்துக்கு எதிரானது, "தீர்க்கதரிசிகளுடைய ஆவிகள் தீர்க்கதரிசிகளுக்கு அடங்கியிருக்கிறதே." (1 கொரிந்தியர் 14:32). இன்னொரு உதாரணமும் இருக்கிறது, கடற்கரை பக்கத்தில் வெகுகாலமாய் பிசாசு பிடித்திருந்த ஒருவனை இயேசு குணப்படுத்தினார், குணப்படுத்தப்பட்ட அவன் "...இயேசுவின் பாதத்தருகே உட்கார்ந்து புத்தி தெளிந்திருக்கிறதைக் கண்டு..." (லூக்கா 8:35). தேவனுடைய அழைப்பு, "வழக்காடுவோம் வாருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்..."(ஏசாயா 1:18) தேவன்

நம்முடைய புத்தியை உபயோகப்படுத்த வேண்டும் என விரும்புகிறார்.

இதை வாசிக்கிற சிலர் நிச்சயமாக இப்படி நினைக்கக்கூடும், “நீர் எப்படி இவ்வாறு சொல்லலாம், நான் எத்தனையோ முறை அந்நிய பாஷையில் பேசியிருக்கிறேன், அது தேவனிடமிருந்து வந்தது என்பதையும் நான் அறிவேன்!” கிறிஸ்தவர்களாக நம்முடைய முடிவுகளை உணர்ச்சி பூர்வமாக ஒரு போதும் எடுக்க கூடாது. நிச்சயமாகவே பிசாசு நம்மை உணர்வு பூர்வமாக நல்லது என நினைக்க வைக்கிறான். அதற்கு பதிலாக நம்முடைய விசுவாசத்தை தேவனுடைய வார்த்தையின் அடிப்படையில் வைக்கவேண்டும்.

என்னுடைய நண்பர் ஒருவர் கவர்ச்சிகர இயக்கத்தைச் சேர்ந்தவராக இருந்து அடிக்கடி அந்நிய பாஷைகளைப் பேசுகிறவராக இருந்தார். இவைகளைப் பற்றி படித்து பார்த்த அவர் தனக்கு கிடைத்திருக்கும் 'வரம்' சரியான ஆவியிடமிருந்து கிடைத்ததுதானா என ஒரு கேள்வி எழுந்தது. அதனால் கர்த்தரிடம் ஊக்கத்துடன் ஜெபித்தார், “கர்த்தாவே, இந்த வரம் உம்முடைய சித்தம் இல்லை என்றால், நான் அனுபவிப்பது சரியான வரத்தின் பாஷைகள் இல்லையென்றால் இதை என்னிடமிருந்து எடுத்துப்போடும்.” அந்த நாளிலிருந்து புரியாத பாஷை பேசும் அனுபவம் நின்று போயிற்று என்று என்னிடம்

அந்த நண்பர் கூறினார். எவ்வளவுதான் பிரசித்தம் பெற்றதாயிருந்தாலும், மற்றவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டதாயிருந்தாலும், மற்ற கிறிஸ்தவர்கள் அதிகமாய் விரும்புகிறதாயிருந்தாலும் உண்மையான கிறிஸ்தவன் அதையெல்லாம் பாராமல் தாங்கள் கொண்டிருக்கும் தவறான பழக்க வழக்கத்தை தேவனுடைய பலிபீடத்தில் ஒப்புக்கொடுத்துவிட முன் வர வேண்டும். "...மனுஷருக்குள்ளே மேன்மையாக எண்ணப்படுத்துகிறது தேவனுக்கு முன்பாக அருவருப்பாயிருக்கிறது." (லூக்கா 16:15).

## அதிகாரம் 9
## பாபிலோனின் தாறுமாறு

இந்நாட்களில், பாஷைகளின் தலைப்பைக் குறித்து நாம் புரிந்துகொள்ள வேண்டிய அவசியம் என்ன? நவீன கவர்ச்சிமிகு இயக்கம் வேதாகமத்தின் தீர்க்கதரிசன வெளிப்படுத்துதலாக இருக்கிறது என்று சொல்கிறார்கள்.

வெளிப்படுத்தின விசேஷம் அதிகாரம் 18 இவ்வாறு சொல்லுகிறது "அவன் பலத்த சத்தமிட்டு மகா பாபிலோன் விழுந்தது! விழுந்தது!...பின்பு, வேறொரு சத்தம் வானத்திலிருந்து உண்டாகக் கேட்டேன்.

அது என் ஜனங்களே, நீங்கள் அவளுடைய பாவங்களுக்கு உடன்படாமலும், அவளுக்கு நேரிடும் வாதைகளில் அகப்படாமலும் இருக்கும்படிக்கு அவளைவிட்டு வெளியே வாருங்கள். (வசனங்கள் 2,4).

பாபேல் கோபுரம் அமைந்திருந்த பண்டைய பாபிலோனின் முக்கிய குணாதியங்களில் ஒன்று அதின் தாறுமாறான மொழிகள் தான், என்பதை நாம் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். (ஆதியாகமம் 11:7-9). கடைசிக் காலத்தில் தேவப்பிள்ளைகள் பாபிலோனின் குழப்பம் நிறைந்த போலியான மத அமைப்பிலிருந்து வெளியே வரச் சொல்லப்படுவர் என்று வெளிப்படுத்தின விசேஷம் கூறுகிறது.

“அப்பொழுது, வலுசர்ப்பத்தின் வாயிலும் மிருகத்தின் வாயிலும் கள்ளத்தீர்க்கதரிசியின் வாயிலுமிருந்து தவளைகளுக்கு ஒப்பான மூன்று அசுத்த ஆவிகள் புறப்பட்டு வரக் கண்டேன்” (வெளி 16:13). 'வாயிலிருந்து' என்ற சொற்றொடர் பேசுவதைக் குறிக்கிறது; ஒரு தவளையின் ஆயுதம் அதன் நாவுதான் என்பதை மறக்கக் கூடாது. அசுத்த நாவுகள்? ஒருவேளை தேவன் நமக்கு எதையோ சொல்ல முயற்சிக்கிறார். நினைவில் கொள்ளுங்கள், பாபிலோனின் குழப்பமான பாஷைகள் பரிசுத்த ஆவியினால் கொடுக்கப்பட்டது அல்ல, மாறாக அவர்களுடைய தேவ விரோத போக்குக்கு

கொடுக்கப்பட்ட ஒரு சாபம். உண்மையில் நவீன 'தாறுமாறு பாஷை' என்கின்ற சொற்றொடர் பண்டைய பாபேல் சம்பவத்திலிருந்துதான் பெற்றுக் கொள்கிறோம். பெந்தெகொஸ்தே நாளில் பாபேலின் சாபம் திருப்பப்பட்டு சுவிசேஷத்தை மற்றவர்கள் புரிந்து கொள்ளும் வகையில் மாற்றப்பட்டது.

## அதிகாரம் 10

## கீழ்ப்படிதலுக்கு ஒப்புக்கொடுத்தல்

நாங்கள் அந்நிய பாஷைகளை பேசியிருக்கிறோம் என்று சொல்பவர்களை நான் பார்த்திருக்கிறேன். அவர்கள் ஒருகையில் சிகரெட்டையும் மறுகையில் மது கோப்பையும் வைத்திருப்பார்கள். இப்பொழுது நாம் ஒன்றை நேரடியாக பார்ப்போம். மிகவும் பரிசுத்தமான பரிசுத்த ஆவியைப் பெறுவதற்கு சில அடிப்படை தகுதிகள் இருக்கின்றன.

இயேசு சொல்கிறார், " நீங்கள் என்னிடத்தில் அன்பாய் இருந்தால் என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள். நான் பிதாவை வேண்டிக்கொள்வேன், அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனே இருக்கும்படிக்குச் சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருள்வார். உலகம் அந்தச் சத்திய

ஆவியானவரைக் காணாமலும் அறியாமலும் இருக்கிறபடியால் அவரைப் பெற்றுக்கொள்ள மாட்டாது; அவர் உங்களுடனே வாசம் பண்ணி உங்களுக்குள்ளே இருப்பதால் நீங்கள் அவரை அறிவீர்கள் (யோவான் 14:15-17).

"இந்த சங்கதிகளைக்குறித்து நாங்கள் அவருக்குச் சாட்சிகளாயிருக்கிறோம்; தேவன் தமக்குக் கீழ்ப்படிகிறவர்களுக்குத் தந்தருளின பரிசுத்த ஆவியும் சாட்சி என்றார்கள்" (அப்போஸ்தலர் 5:32).

சில வருடங்களுக்கு முன்பதாக புகழ்பெற்ற அநேக டி.வி சுவிசேஷகர்கள் வரும் வழியில் விழுந்து விடுவார்கள். அவர்கள் எல்லாரும் தாங்கள் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு பாஷைகளின் வரத்தைப் பெற்றவர்களென கூறிக்கொண்டனர். ஆனால் அவர்கள் ஒட்டுமொத்த கீழ்படியாமையின் மோசமான வாழ்க்கையை நடத்திக்கொண்டு வந்தனர். டி.வியில் பாஷைகளை பேசுவார்கள், வெளியில் வந்து ஏற்றுக்கொள்ளப்படாத வாழ்க்கையை வாழ்வார்கள். ஏதோ சரியில்லாத ஒன்று. இவர்களுடைய செயல்பாடு என்னை வியப்பூட்ட வைக்கிறது. "அவர்கள் பெற்றிருப்பது உண்மையான பாஷைகளின் வரம் என்றால் இந்த கவர்ச்சியூட்டும் இயக்க போதகர்கள் வெளி நாடுகளுக்குப் பிரசங்கம் செய்ய செல்லும் போது மொழி பெயர்ப்பாளர்களின் குழுவை சுமர்த்திக் கொள்வது ஏன்? "

தேவன் ஏன் ஆவியை அளிக்கிறார்? “பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து, எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிப்பரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள், என்றார்” (அப்போஸ்தலர் 1:8). தேவன் வாய் அலப்புவதற்காக ஆவியைக் கொடுக்கவில்லை: மாறாக சாட்சி பகரும் வல்லமைக்கே கொடுக்கிறார்!

நாம் எப்படி உண்மையான பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெற முடியும்? தேவனுக்கு முழுமையாக ஒப்புக்கொடுங்கள். மற்றவர்களை மன்னிக்க தயாராய் இருங்கள். தேவனுக்குக் கீழ்ப்படிந்து அவரிடம் கேளுங்கள். லூக்கா 11:13 சொல்வது, “பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது, பரம பிதாவானவர் தம்மிடத்தில் வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்குப் பரிசுத்த ஆவியைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா என்றார்”

---

1. 'டெல்பி' என்ற தலைப்பின் கீழ் தி கன்சைஸ் கொலம்பியா என்சைக்லோபீடியா அண்டு கிராம்ப்டன்ஸ் இன்டார்க்டிவ் என்சைக்லோபீடியா

2. 'பெண்டகார்டல்ஸ்' என்ற தலைப்பின் கீழ் கிராம்ப்டன்ஸ் இன்டராக்டிவ் என்சைக்லோபீடியா.

AMAZING FACTS India

# அமேசிங் ஃபேக்ட்ஸ் வேதாகமப் பாடங்கள் மூலம் உங்கள் தேடுதலைத் தொடருங்கள்!

மனதைக் கவரும், ஊக்கமூட்டும்
இந்தத் தொடர் சத்தியங்கள் உங்கள்
எதிர்காலத்தை தைரியத்துடனும்
நம்பிக்கையுடனும் எதிர்கொள்ள உதவும்.

எங்களை தொடர்பு கொள்ள

**BibleStudy.AFTV.in**

என்ற இணையதளத்தில் இன்றே
எங்களை சந்திக்கவும்.

Post Box No. 51 • Banjara Hills
Hyderabad, TS 500034

www.AmazingFactsIndia.org